# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

# The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

**අති විශෙෂ** **அதிவிசேஷமானது** **EXTRAORDINARY**

අංක 823/16 – 1994 ජූනි 16 වැනි බ්‍රහස්පතින්ද – 1994.06.16

823/16 ஆம் இலக்கம் — 1994 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை

**No. 823/16 – THURSDAY, JUNE 16, 1994**

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) **(Published by Authority)**

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரேணுகா ஹேரத் ரணவீர,
சுகாதார, மகளிர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
1994 மே 23.

இவ்வொழுங்குவிதிகள், 1994 ஆம் ஆண்டின் உணவு (பாலிலான பாதுகாப்பிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1994 செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1. ஆளெவரும் பாலில் பாதுகாப்பிகள் எவற்றையும் பயன்படுத்தலாகாது.

2. ஆயின், எவ்வாறாயினும், இவ்வொழுங்கு விதியின் 6 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள விதிவிலக்கான சூழ்நிலைகளின்கீழ் உணவுத்தரம் வாய்ந்த, மட்டத்தின் ஐதரசன் பேரொட்சையிட்டு, பால் சேகரிப்பு நிலையங்களில் அத்துடன்/அல்லது தொழிற்சாலைகளில் பாலிலான பாதுகாப்பியொன்றாகப் பயன்படுத்தப்படலாம்.

3. எவ்வாறாயினும், பால் சேகரிப்பு நிலையங்களில் அத்துடன்/அல்லது தொழிற்சாலைகளில் பாலில் ஐதரசன் பேரொட்சையிட்டு (எச்$_2$ஒ$_2$) பயன்படுத்தப்படும்போது, சேமிப்பு நிலையத்தில்/தொழிற்சாலையில் அத்தகைய பொறுப்பாயுள்ள ஆளினால் பாலில் ஐதரசன் பேரொட்சையிட்டு பயன்படுத்தப்பட்ட நேரத்திலிருந்து பன்னிரெண்டு மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலத்தினுள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது பெரும்பாகச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளரின் பிரதிப் பெரும்பாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளரின்,சுகாதார மருத்துவ அலுவலரின், அல்லது மாவட்டச் சுகாதார அலுவலரின் அல்லது பிரதேசச் சுகாதாரப் பணிப்பாளரின் கவனத்துக்கு அது கொண்டுவரப்படுதல் வேண்டும்.

4. அனுமதிக்கப்படும்போதெல்லாம், ஆளெவரும், உற்பத்திப்பொருளின் எக்கட்டத்திலும் 0.05 சதவீதத்தை விஞ்சுகின்ற ஐதரசன் பேரொட்சையிட்டின் (எச்$_2$ஒ$_2$) செறிவொன்றைச் சேர்த்தலோ அல்லது சேர்ப்பித்தலோ ஆகாது.

5. மேலேயுள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது, பிரதான உணவு அதிகாரி (சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி), இவ்வொழுங்குவிதிகளின் கீழான தேவைப்பாடுகள் திருப்திப்படுத்தபடின், குறிப்பிட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு ஐதரசன் பேரொட்சையிட்டின் (எச்$_2$ஒ$_2$) பயன்பாட்டை அதிகாரமளிக்கலாம்.

6. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகள் பின்வருவனவாதல் வேண்டும் : —

(அ) குளிரூட்டும் சாதனம் பழுதடைதல் ;

(ஆ) மின்சாரத் தடை ;

(இ) பால் போக்குவரத்து தடைப்படுதல் ;

(ஈ) இயற்கையான இடர்ப்பாடுகள், உள்நாடடுக் குழப்பம், வேலை நிறுத்தங்கள், போர்ச் செயல்கள் முதலியவை காரணமாக பால் குளிரூட்டும் நிலையங்களைத் தொழிற்படுத்த இயலாமை.

7. எவ்வாறாயினும், பாலிலான பாதுகாப்பியாக ஐதரசன் பேரொட்சையிட்டை (எச்$_2$ஒ$_2$) பயன்படுத்துவதில் பின்வரும் நிபந்தனைகள் கண்டிப்பாக இணங்கியொழுகப்பட வேண்டும் : —

(அ) சேர்க்கையானது பால் உற்பத்தியாளர்களினால் அல்லது, குறிப்பிட்ட பால் தொழிற்சாலையின் பயிற்சிபெற்ற, அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்பாகவுள்ள பிரதிநிதியினால் செய்யப்படுதல் ,

(ஆ) ஐதரசன் பேரொட்சையிட்டின் (எச்$_2$ஒ$_2$) பயன்பாடு பற்றிய பதிவேடுகள் பேணப்படுதல் ;

(இ) பெற்றுக்கொள்ளும் தொழிற்சாலையில் பாலானது எஞ்சிய ஐதரசன் பேரொட்சையிட்டுக்காக (எச்$_2$ஒ$_2$) கிரமமாகச் செவ்வை பார்க்கப்பட்டு பதிவேடுகள் பேணப்படுதல் ;

(ஈ) ஐதரசன் பேரொட்சையிட்டின் பயன்பாடு (எச்$_2$ஒ$_2$) இயைபான தொழிற்சாலையின் தகைமைபெற்ற தரக்கட்டுப்பாட்டு அலுவலரினால் கவனமாகக் கண்காணிக்கப்படுதல்.

8. இயைபான பெரும்பாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார மருத்துவ அலுவலர்கள் அல்லது மாவட்ட சுகாதார அலுவலர், பாலிலான பாதுகாப்பியாக ஐதரசன் பேரொட்சையிட்டை (எச்$_2$ஒ$_2$) பயன்படுத்த அனுமதிப்பதற்கான முடிவு பற்றிப் பால் சேகரிப்பு நிலையத்திற்கு அல்லது தொழிற்சாலைக்கு அறிவித்தல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு தவிர, பாலில் ஐதரசன் பேரொட்சையிட்டை (எச்$_2$ஒ$_2$) எவரேனும் உற்பத்தியாளர், சேகரிப்பாளர், பதனிடுபவர் அல்லது வேறெவரேனுமாள் பயன்படுத்துதல், 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின்கீழும் அதன்கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழும் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்.